**Judicial Form No.53**

**(See Rule 42)**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP**

**C.C. No: 204 of 2024**

**DATE :06.01.2026**

**Depositions of witness for Prosecution**

**PW : 10**

| **Name** | முத்துக்குமார் | **Caste** | |
|---|---|---|---|
| **Father/ Husband's Name** | பொன்னுச்சாமி | **Calling** | |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of January 2026**

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை –**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் காவல் நிலையத்தில், வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.06.2022 ம் தேதி வத்திராயிருப்பு காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளராக நான் பணியில் இருந்த பொழுது, வத்திராயிருப்பு காவல் நிலைய கு.எண்.156/2022, சட்டப்பிரிவுகள் 283, 337 IPC ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் காயம்பட்ட நபர் இறந்துவிட்ட காரணத்தினால் வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். அன்றைய தினமே சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டதில் ஏற்கனவே சிறப்பு சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து வைத்திருந்ததால் தனியாக நான் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை.

பின்னர் இறந்து போன நபரின் பிரேத விசாரணைக்காக அன்றைய தினம் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு சென்று பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இறப்பிற்கான உண்மை காரணம் அறிய வேண்டி இறந்து போன நபரின் உடலை உடற்கூறாய்வுக்காக முதல் நிலை காவலர் சரவணகுமார் என்பவர் மூலம் மருத்துவரிடம் ஒப்படைத்தேன். பின்னர் வழக்கின் சாட்சிகள் முருகன், கண்ணன், காயப்பட்ட சிவா ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கினை வத்திராயிருப்பு காவல் ஆய்வாளர் ஆறுமுகம் வசம் ஒப்படைத்து விட்டேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை –**

வழக்கறிஞர் நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதால், எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கிறஞர் ஆஜர் இல்லை. வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை அதனால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு